# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# க.பொ.த (உயர்தரம்) முன்னோடிப் பரீட்சை- 2021

| தரம் :- 13 (2021) | பொருளியல் 21-T-1 | நேரம் : 2 மணிக்கியாலம் |
|---|---|---|

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**


01. நிறைதொழில் மட்டம் என்பது.
1. அருமையான வளங்களை பூரணமாக உற்பத்தியில் பயன்படுத்தலாகும்.
2. அருமையான வளங்களை உற்பத்தியில் உத்தமமாகக் பயன்படுத்தலாகும்.
3. அருமையான வளங்களை உற்பத்தியில் பூரணமாகவும் விளைதிறனோடும் பயன்படுத்தலாகும்.
4. அருமையான வளங்களை மிக குறைந்த செலவில் கூடிய அலகுகளை உற்பத்தி செய்யும் வகையில் பயன்படுத்தலாகும்.
5. அருமையான வளங்களை சமூகத்தின் விருப்பிற்கேற்ப ஒதுக்கீடு செய்து உற்பத்தியில் பயன்படுத்தலாகும்.

02. தனிநபர், வேலையாட்கள் கல்வி, பயிற்சி என்பவற்றினூடாக பெற்ற அறிவு, திறன்கள் தனிப்பட்ட மற்றும் சமூக ஆளுமைகளின் ஒட்டு மொத்தத்தினை எவ்வாறு அழைப்பீர்?

1. மனித மூலதனம் 2. உழைப்பு 3. சமூக மூலதனம்
4. முயற்சி 5. பொருளாதாரப் பொதுப்பணி மூலதனம்

03. சுதந்திரமான சந்தைப் பொருளாதாரமொன்றில் விலைப்பொறிமுறையின் தொழிற்பாடு தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?
1. போட்டித்தன்மை கொண்ட துறைகள் மத்தியில் வளங்களை சமமாக விலை ஒதுக்கீடு செய்கின்றது.
2. உற்பத்தி இலக்குகளை நிர்ணயிக்கும் பொருட்டு விலைப்பொறிமுறையை அரசாங்கம் பயன்படுத்துகின்றது.
3. அருமையான பொருளாதார வளங்களை சமூக நலன்களைக் கருத்தில் கொண்டு ஒதுக்கீடு செய்வதற்கு விலைகள் உதவுகின்றது.
4. விற்பனையாளர்கள் மற்றும் கொள்வனவாளர்கள் விலைச் சமிக்ஞைகளுக்கு வினைத்திறனுடன் உரியதுலங்களை வழங்கத் தேவையான ஊக்குவிப்புக்களை வழங்கும்.
5. சந்தை விலை உயர்வடைய அனுமதிப்பதனூடாக பொருளொன்றின் மிகை நிரம்பலை அகற்றுவதற்கு உதவும்.

04. ஆடை, அரிசி எனும் இரண்டு வகையான பண்டங்களை உற்பத்தி செய்யும் பொருளாதாரமொன்றின் உற்பத்தி சாத்தியவளையி பின்வருமாறு தரப்பட்டுள்ளது. A புள்ளி தொடர்பான மிகவும் சரியான கூற்று எது?





1. பொருளாதார வினைத்திறனை வெளிப்படுத்தும் ஒரு விசேட புள்ளியாகும்.
2. நிறைதொழில் மட்டத்தையும் முழு உற்பத்தியையும் வெளிப்படுத்தும்
3. குறைதொழில் மட்டத்தையும் முழு உற்பத்தியையும் வெளிப்படுத்தும்.
4. பூச்சிய அமையச்செலவில் அரிசி, ஆடை ஆகிய இரண்டு பண்ட உற்பத்தியையும் அதிகரிக்க முடியும்.
5. வளஒதுக்கீடு வினைத்திறனையும் பொருளாதார பின்னடைவையும் வெளிப்படுத்தும்.

05. பின்வருவனவற்றில் குறித்தவொரு பொருளின்கேள்வி அதிகரிப்புக்கு இட்டுச்செல்லாதது எது?

1) வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு
2) அப்பொருளின் விலை வீழ்ச்சியடைதல்.
3) பதிலீட்டுப் பொருளின் விலை வீழ்ச்சியடைதல்.
4) நிரப்புப் பொருளின் விலை வீழ்ச்சியடைதல்.
5) அப்பொருளுக்கான சுவையில் ஏற்படும் அதிகரிப்பு

06. தரப்பட்டுள்ள நிரம்பல் கோட்டிற்கு பொருத்தமான நிரம்பல் சார்பு எது?




1. Qs = -600 + 20p
2. Qs = -300 + 20p
3. Qs = -300 + 10p
4. Qs = -300 + 15p
5. Qs = -1500 + 15p

07. நுகர்வோன் வருமானம் வீழ்ச்சியடைந்தபோது X பண்டத்தின் கேள்வி அதிகரித்து அதன் விலையும் அதிகரித்தது எனின் X பண்டம்.
1. அத்தியவசியப் பண்டமாகும்.
2. ஆடம்பரப் பன்டமாகும்
3. இழிவுப் பண்டமாகும்
4. சாதாரண பண்டமாகும்
5. இணைப்புப் பண்டமாகும்

08. A என்ற பண்டத்தின் நிரம்பல்சார்பு $Qs_A = 10P_A$ எனத் தரப்பட்டுள்ளது. இப்பண்டத்தின் விலையில் 20 சதவீத அதிகரிப்பு ஏற்படும் போது அதன் நிரம்பல் தொகையானது
1. 30 சதவீதத்தினால் அதிகரிக்கும்
2. 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடையும்
3. 20 சதவீதத்தினால் அதிகரிக்கும்
4. 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடையும்
5. 15 சதவீதத்தினால் அதிகரிக்கும்

09. அரிசிக்கான விலைசார் கேள்வி நெகிழ்ச்சி -0.75 ஆகும். அரிசிக்கான நிரம்பல் அதிகரிக்கும் போது பின்வருவனவற்றுள் எது உண்மையாகக் காணப்படும்?

1. விலையில் வீழ்ச்சி ஏற்படுவதோடு மொத்த வருவாயில் அதிகரிப்பு ஏற்படும்.
2. விலையில் வீழ்ச்சி ஏற்படுவதோடு மொத்த வருவாயில் மாற்றம் எதுவும் நிகழமாட்டாது.
3. விலையிலும், தொகையிலும் வீழ்ச்சி ஏற்படுவதோடு மொத்த வருவாய் அதிகரிக்கும்.
4. விலையில் வீழ்ச்சி ஏற்படுவதோடு தொகையிலும் அதிகரிப்பு ஏற்பட்டு மொத்த வருவாயில் வீழ்ச்சி ஏற்படும்.
5. விலையில் வீழ்ச்சி ஏற்படுவதோடு தொகையிலும் அதிகரிப்பு ஏற்பட்டு மொத்த வருவாயில் அதிகரிப்பு ஏற்படும்.

10. தேங்காய் சந்தையில் அதன் நிரம்பல் வீழ்ச்சியடைந்த அதேவேளை கேள்வியானது அதிகரித்தது. அந்நிகழ்வுகள் தேங்காய்க்கான சந்தைவிலை, தொகை ஏற்பட்ட மாற்றத்தினை சரியாக வெளிப்படுத்தும் விடை எது?

| | தேங்காயின் விலை | தேங்காயின் தொகை |
|---|---|---|
| 1. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 2. | அதிகரிக்கும் | குறையும் |
| 3. | நிச்சயமற்றது | அதிகரிக்கும் |
| 4. | குறையும் | நிச்சயமற்றது |
| 5. | அதிகரிக்கும் | நிச்சயமற்றது |

11. X என்ற பண்டத்தின் கேள்விச்சார்பு Qd=800-10P எனவும் நிரம்பல் சார்பு Qs=-100+10P எனவும் தரப்பட்டுள்ளது. X பண்டத்தின் சமநிலையில் பொருளாதார மிகை எவ்வளவாகக் காணப்படும்


1. ரூ.6125 2. ரூ.24500 3. ரூ.10250 4. ரூ.12250 5. ரூ.18375

12. அலகொன்று ரூபா 100 விலையில் சமநிலை அடைந்துள்ள கருதுகோள் அடிப்படையிலான போட்டிச் சந்தையொன்றைக் கருதுக. தற்போது சந்தைச் சமநிலை விலை மாறாதுள்ள நிலையில் சந்தைநிரம்பல் வளையியானது எல்லா விலைகளிலும் நெகிழ்வுள்ள நிலையிலிருந்து எல்லா விலைகளிலும் நெகிழ்வற்ற நிலைக்கு மாறுவதாகக் கருதுக. இம்மாற்றம் நுகர்வோன் மிகை, உற்பத்தியாளன் மிகை என்பவற்றின் மீது ஏற்படுத்தும் விளைவுயாது?

| | நுகர்வோன் மிகை | உற்பத்தியாளன் மிகை |
|---|---|---|
| (1) | அதிகரிக்கும் | வீழ்ச்சியடையும் |
| (2) | அதிகரிக்கும் | மாற்றமில்லாதிருக்கும் |
| (3) | மாற்றமில்லாதிருக்கும் | அதிகரிக்கும் |
| (4) | மாற்றமில்லாதிருக்கும் | மாற்றமில்லாதிருக்கும் |
| (5) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

13. பின்வரும் வரைபடம் Y என்ற பண்டத்தின் மீது சிறப்பு வரி விதிக்கப்பட்டதன் பின்னுள்ள நிலைமையை புலப்படுத்துகின்றது.


வரிவிதிப்புக் காரணமாக உற்பத்தியாளர் மிகையில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் மிகைவரிச்சுமையையும் சரியாக காட்டும் விடை




| | உற்பத்தியாளர் மிகையில் ஏற்பட்ட வீழ்ச்சி | மிகை வரிச்சுமை |
|---|---|---|
| 1. | 900 ரூபா | 1350 ரூபா |
| 2. | 3400 ரூபா | 250 ரூபா |
| 3. | 1350 ரூபா | 250 ரூபா |
| 4. | 1350 ரூபா | 900 ரூபா |
| 5. | 900 ரூபா | 250 ரூபா |

14. குறிப்பிட்ட ஒரு பண்டத்திற்கு அரசு அலகு மானியம் வழங்கியபின் காணப்பட்ட சந்தை நிலைமை கீழே காட்டப்பட்டுள்ளது.

வரைபடத்தின்படி மானியத்தினால் அரசுக்கு ஏற்படும் செலவும் இழக்கப்படும் சமூகநல சேவைகளும் பற்றிய பின்வரும் பெறுமதிகளில் சரியான பெறுமதிகளைக் காட்டும் விடை யாது?




| | மானியத்துக்கான அரச செலவு | இழக்கப்படும் சமூக நலச் சேவைகள் |
|---|---|---|
| (1) | ரூ. 4000 | ரூ. 1000 |
| (2) | ரூ. 8000 | ரூ. 500 |
| (3) | ரூ. 4000 | ரூ. 500 |
| (4) | ரூ. 6000 | ரூ. 1000 |
| (5) | ரூ. 8000 | ரூ. 1000 |

15. அரிசிக்கான கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$Qd=2000-10P$$
$$Qs=100+10P$$

(P=விலை ரூபாவிலும் Q = தொகை கிலோகிராம்)

அரசாங்கம் அரிசி கிலோகிராம் ஒன்றிற்கு ரூபா 80ஐ உச்ச விற்பனை விலையாக நிர்ணயித்துள்ளதாகக் கருதவும். நுகர்வோர் மிகை எவ்வளவாகக் காணப்படும்?

1. ரூபா 45000 2. ரூபா 47250 3. ரூபா 67500 4. ரூபா 72000 5. ரூபா 4000

16. குறுங்காலத்தில் மாறும் காரணியை அதிகரிக்கும் போது சராசரி உற்பத்தியை விட எல்லை உற்பத்தி கூடிய வேகத்தில் வீழ்ச்சியடையும் போது மொத்த உற்பத்தியானது?

1. அதிகரிக்கும் வேகத்தில் அதிகரிக்கும்
2. உச்சநிலையில் காணப்படும்
3. வீழ்ச்சியடைந்து செல்லும்
4. குறையும் வேகத்தில் அதிகரிக்கும்
5. அதிகரிக்கும் வேகத்தில் வீழ்ச்சியடையும்

17. குறுங்காலத்தில் உற்பத்திச் செயற்பாடொன்றில் உற்பத்தி பூச்சியமாகின்றபோது மொத்தச் செலவு 180 ரூபாவாகவும், 12 அலகுகளை உற்பத்தி செய்கின்றபோது மொத்தச் செலவு 720 ரூபாவாகவும் எனின் அவ் வெளியீட்டு மட்டத்தின்போது சராசரி மாறும் செலவு (Avc) எவ்வளவாக இருக்கும்?

1. ரூபா 15.00
2. ரூபா 30.00
3. ரூபா 45.00
4. ரூபா 60.00
5. ரூபா 75.00

18. பின்வருவனவற்றில் நிறைபோட்டிச் சந்தையொன்றின் பண்பு அல்லாதது எது?

1. தனி நிறுவனம் எவ்வித குறிப்பிடத்தக்க சந்தைச் சக்தியினையும் கொண்டிருக்க மாட்டாது.
2. சந்தைக் கேள்வி வளையியியானது பூரண நெகிழ்ச்சியுடையதாகக் காணப்படும்.
3. பொருளின் விலையினைப் பாதிக்காமல் எந்தத் தனி நிறுவனமும் அதன் உற்பத்தியையும் விற்பனையையும் அதிகரிக்கலாம்.
4. தற்போது காணப்படும் நிறுவனங்கள் புதிய நிறுவனங்களின் உள்வருகையைத் தடுக்க முடியாது.
5. சந்தையில் அதிகளவான கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் காணப்படுகின்றனர்.

19. நிறைபோட்டி தொழிலுள்ள நிறுவனமொன்றின் சமநிலை வெளியீட்டு மட்டம் 400 அலகுகளாகும். அவ்வெளியீட்டிற்குரிய சராசரி மாறும் செலவு 28 ரூபாவாகவும் சராசரி நிலையான செலவு 12 ரூபாவாகவும் காணப்பட்டது. அவ்வெளியீட்டு மட்டத்தில் மொத்த இலாபம் 2000 ரூபாவாகும். இந்நிலையில் அந்நிறுவனத்தின் விலை எவ்வளவாகக் காணப்படும்.

1. ரூபா 50
2. ரூபா 45
3. ரூபா 40
4. ரூபா 75
5. ரூபா 90

20. தேசிய கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் அடிப்படை விலை ( Basic Price ) தொடர்பான மிகச்சரியான கூற்று எது?

1. பண்டங்களுக்கு நுகர்வோர் செலுத்தும் விலையைக் குறிக்கும்.
2. உற்பத்தி செய்யப்படும் இடத்திலிருந்து விற்பனையாளரை நோக்கி பண்டங்கள் செல்லும் போது உற்பத்தியாளரால் அறவிடப்படும் விலையைக்குறிக்கும்.
3. கொள்வனவாளர் விலையோடு தேறிய நேரில் வரிகளை கூட்டும் போது கிடைக்கும் விலையை குறிக்கும்.
4. உற்பத்தியாளர் பண்டங்களை உற்பத்தி செய்து விற்கத் தயாராக வைத்திருக்கும் போது உற்பத்தியாளரால் அறவிடப்படும் விலையைக்குறிக்கும்.
5. காரணிச் செலவின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட விலையோடு தேறிய நேரில் வரியை சேர்க்கும் போது பெறப்படும் விலையைக் குறிக்கும்.

21. ஒரு நாட்டின் இறுதிநுகர்வு 15000 பில். ரூபாவும் மொத்த உள்நாட்டு மூலதனாக்கம் 8000பில். ரூபாவாகவும் பொருள் சேவைகளின் ஏற்றுமதி 7000 பில். ரூபாவாகவும் பொருள் சேவைகளின் இறக்குமதி 9000 பில். ரூபாவாகவும் மூலதன நுகர்வு 100 பில். ரூபாவாகவும் காணப்பட்டது. எனின் அந்நாட்டின் தேறிய உள்நாட்டு உற்பத்தியும் மூலவளப் பயன்பாடும் எவ்வளவாகக் காணப்படும்.

| | தேறிய உள்நாட்டு உற்பத்தி (பில். ரூபா) | மூலவளப் பயன்பாடு (பில். ரூபா) |
|---|---|---|
| 1. | 21000 | 30000 |
| 2. | 21000 | 32000 |
| 3. | 20900 | 30000 |
| 4. | 20900 | 34000 |
| 5. | 20900 | 21000 |

22. இலங்கையின் தேசியகணக்குதொடர்பானவிபரங்கள் வருமாறு பெறுமதிகள் யாவும் பில்லியன் ரூபாக்களிலுள்ளது.

| விபரம் | பெறுமதி |
|---|---|
| ஊழியர்களின் நட்டஈடு | 3300 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 5900 |
| உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள் | 450 |
| நிலையான மூலதன நுகர்வு | 800 |
| கலப்பு வருமானம் | 750 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | -600 |

இத்தரவுகளின்படி இலங்கையின் மொத்த தொழிற்பாட்டுமிகையின் பெறுமதி எவ்வளவாகக் காணப்படும்

1. 7450 பில்.ரூபா
2. 6350 பில்.ரூபா
3. 6700 பில்.ரூபா
4. 6100 பில்.ரூபா
5. 10150 பில்.ரூபா

23. கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றில் அரசாங்க கொள்வனவுகள்(G) ரூபா 500 பில்லியன் வரிகள் (T) ரூ200 பில்லியன், தனியார் சேமிப்பு (s) ரூ 250 பிலலியன் தனியார் முதலீடுகள் (I) ரூ 300 பில்லியன் ஆக உள்ளதெனக் கருதுக. இப் பொருளாதாரத்தின் தேறிய ஏற்றுமதிகளின் பெறுமதி யாது?

1. ரூபா 300 பில்லியன்
2. ரூபா 350 பில்லியன்
3. ரூபா -450 பில்லியன்
4. ரூபா -800 பில்லியன்
5. ரூபா -350 பில்லியன்

24. எளிய பொருளாதாரமொன்றின் தன்னிச்சையான செலவீட்டு மாறியின் பெறுமதி 600 ரூபாவாகவும், முதலீடு 400 ரூபாவாகவும், பெருக்கியின் பெறுமதி 2.5 ஆகவும் காணப்பட்டது. இப் பொருளாதாரத்தில் சமநிலை வருமானம், எல்லை நுகர்வுநாட்டம் (MPC) என்பவற்றை சரியாக காட்டும் விடை எது?

| **சமநிலை வருமானம்** | **எல்லை நுகர்வுமட்டம்** |
|---|---|
| 1. ரூபா 1500 | 0.4 |
| 2. ரூபா 1000 | 0.6 |
| 3. ரூபா 1500 | 0.6 |
| 4. ரூபா 2000 | 0.75 |
| 5. ரூபா 2500 | 0.8 |

25. ஒரு பொருளாதாரம் தற்போது ரூபா 6000 பில்லியன் சமநிலை வெளியீட்டு மட்டத்தில் இயங்குவதாகவும் அதன் எல்லை நுகர்வு நாட்டம் 0.8 எனவும் கொள்க. இப்பொருளாதாரத்தின் நிறைதொழில் வெளியீட்டு மட்டச் சமநிலை ரூபா 7500 பில்லியன் ஆயின், பின்வரும் கொள்கைத் தீர்வுகளில் எது நிறைதொழில்மட்டம் எய்தப்படுவதை உறுதி செய்யும்?

1. வரிகளை ரூபா 200 பில்லியனால் குறைத்தல்.
2. அரசாங்கச் செலவீடுகளை ரூபா 1500 பில்லியனால் அதிகரித்தல்.
3. அரசாங்கச் செலவீடுகளை ரூபா 375 பில்லியனால் அதிகரித்தல்.
4. வரிகளை ரூபா 300 பில்லியனால் குறைத்தல்.
5. வரிகளை ரூபா 375 பில்லியனால் குறைத்தல்.

26. பணத்தின் உத்தேச நோக்கக் கேள்விக்கு அடிப்படையான பணத்தின் தொழிற்பாடு எது?
1. பரிமாற்று ஊடகம்
2. பெறுமானத் திரட்டு
3. பெறுமானத்தை அளவிடும் அளவுகோல்
4. கணக்கீட்டு அலகு
5. பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமம்

27. பொருளாதாரமொன்றின் பணநிரம்பல் 4% ஆல் அதிகரித்த அதேவேளை பணத்தின் சுற்றோட்ட வேகமும் 3% ஆல் அதிகரித்தது. இப்பொருளாதாரத்தில் பொதுவிலைமட்டம் 2% ஆல் அதிகரிக்கும்போது அங்கு மெய்வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் எவ்வளவாக இருக்கும்.
1. 7% ஆல் அதிகரிக்கும்.
2. 12% ஆல் அதிகரிக்கும்.
3. 5% ஆல் அதிகரிக்கும்.
4. 6% ஆல் அதிகரிக்கும்.
5. 9% ஆல் அதிகரிக்கும்.

28. பின்வருவனவற்றில் எது செலவுத்தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தும்
1. வேலையில்லாப் பிரச்சனை குறைதல்
2. வணிக வங்கிகளின் நுகர்வுக்கடன் வழங்கலை அதிகரித்தல்
3. மத்திய வங்கி பிணையங்களை விற்பனை செய்தல்
4. மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கான ஒதுக்குத் தேவையினைக் குறைத்தல்
5. தொழிற்சங்க போராட்டத்தினால் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு

29. மத்திய வங்கியானது அதன் கொள்கை வட்டி வீதத்தினைக் குறைக்கும்போது பின்வருவனவற்றில் எது நடைபெறும்?
1. பண நிரம்பல் அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
2. பணக் கேள்வி வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
3. பணக் கேள்வி அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் அதிகரிக்கும்.
4. பணக் கேள்வி, பண நிரம்பல், சந்தை வட்டி வீதங்கள் ஆகியன அதிகரித்தல்.
5. பண நிரம்பல் வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.

30. வணிக வங்கி ஒன்றின் ஐந்தொகை கீழே தரப்படுகின்றது.

| பொறுப்புக்கள் | பெறுமதி (ரூபா மில்லியன்) | சொத்துக்கள் | பெறுமதி (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 250 000 | ஒதுக்குகள் | 80 000 |
| | | திறைசேரி முறிகள் | 50 000 |
| | | கடன்கள் | 120 000 |
| மொத்த பொறுப்புக்கள் | 250 000 | மொத்தச் சொத்துக்கள் | 250 000 |

சட்டரீதியான நியதி ஒதுக்கு வீதம் 10% எனில் இவ்வங்கியானது எதிர்காலத்தில் வழங்கக்கூடிய உச்ச அளவிலான புதிய கடன்களின் தொகை யாது?
1. ரூபா 25,000 பில்லியன்
2. ரூபா 55,000 பில்லியன்
3. ரூபா 175,000 பில்லியன்
4. ரூபா 145,000 பில்லியன்
5. ரூபா 550,000 பில்லியன்

31. சமூக ரீதியில் நன்மை பயக்கும் என்ற காரணத்தால் அரசாங்கம் ஒரு தனியார் முதலீட்டுத் திட்டத்துக்கு அனுமதி வழங்கத் தீர்மானித்தது. இத்தீர்மானத்தை எடுக்கும்போது தனியார் செலவுகள் ரூபா 700 மில்லியன் ஆகவும் தனியார் நன்மைகள் ரூபா 800 மில்லியன் ஆகவும் வெளிவாரிச் செலவுகள் ரூபா 200 மில்லியனாகவும் மதிப்பிடப்பட்டன.

இத்திட்டத்தின் வெளிவாரி நன்மைகள் தொடர்பில் இம்மதிப்பீடுகள் குறிப்பிடுவது என்ன?

1. வெளிவாரி நன்மைகள் தனியார் நன்மைகளுக்குச் சமமாகும்
2. வெளிவாரி நன்மைகள் ரூபா 100 மில்லியனை விட உயர்வாகும்.
3. வெளிவாரி நன்மைகள் வெளிவாரிச் செலவுகளை விட உயர்வாகும்.
4. வெளிவாரி நன்மைகள் நேர்க்கணியமாக உள்ளதாயினும் ரூபா 100 மில்லியனை விடக் குறைவாகும்.
5. வெளிவாரி நன்மைகள் எதுவும் கிடையாது.

32. ஒரு பொருளின் உற்பத்தி நேர்க்கணிய வெளிவாரியை ஏற்படுத்துமாயின், அவ்வாறான பொருளின் சந்தைச் சமநிலையின் போது பின்வருவனவற்றுள் எது உண்மையாக இருக்கும்?
1. எல்லை சமூக நன்மையானது எல்லை தனியார் தன்மை விட குறைவாக இருத்தல்.
2. எல்லை சமூக நன்மையானது எல்லை தனியார் நன்மைக்கு சமமாக இருக்கும்
3. எல்லை சமூகச் செலவானது எல்லை சமூக நன்மையை விட உயர்வாக இருக்கும்.
4. எல்லைச் சமூகச் செலவானது எல்லை தனியார் செலவினை விட உயர்வாகயிருத்தல்.
5. எல்லைச் சமூகச் செலவானது எல்லைத் தனியார் செலவினை விட குறைவாகயிருத்தல்.

33. குறைந்து செல்லும் வரி முறையின் வரைவிலக்கணமாக அமைவது.
1. எல்லா வரி இறுப்பாளர்களும் தமது வருமானங்களின் முழுத் தொகையின் சமமான அளவுகளை வரியாகச் செலுத்துகின்றனர்.
2. குறைந்த வருமானம் பெறுபவர்களுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வருமானம் பெறுவோர் தமது வருமானத்தின் குறைவான ஒரு சதவீதத்தை வரியாகச் செலுத்துவர்.
3. உயர்ந்த வருமானம் பெறுவோர் தமது வருமானத்தில் உயர்வான ஒரு சதவீதத்தை வரியாகச் செலுத்துவர்.
4. உயர்ந்த வருமானம் பெறுவோரும், குறைந்த வருமானம் பெறுபவர்களும் சமமான சதவீதத்தை வரியாகச் செலுத்துவர்
5. வரிச்சுமையானது பின்னோக்கி நகர்த்தப்படலாம்.

34. 2019ம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் நடைமுறைச் செலவீனம் மொத்தச் செலவிலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் எத்தனை சதவீதமாகக் காணப்பட்டது?

| | மொத்த அரச செலவில் | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் |
|---|---|---|
| 1. | 83.8 | 17.0 |
| 2. | 78.0 | 14.4 |
| 3. | 72.6 | 16.1 |
| 4. | 75.4 | 16.1 |
| 5. | 82.0 | 14.4 |

35. பின்வரும் சமன்பாடுகளில் எது உண்மையற்றது?
1. அரச பாதீட்டு மொத்த மீதி = அரசின் மொத்தப்பெறுகை - அரசின் மொத்தக் கொடுப்பனவு
2. அரச பாதீட்டு மொத்த மீதி = அரச வருமானம் – அரசின் செலவுகள்

3. அரச பாதீட்டின் மொத்த மீதி = ஆரம்பகணக்கு மீதி + அரச கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள்
4. அரச பாதீட்டின் நடைமுறைக்கணக்கு மீதி = அரச வருமானம் – அரசின் நடப்புச் செலவு
5. அரச பாதீட்டின் முதன்மைக்கணக்கு மீதி = அரச பாதீட்டின் மொத்த மீதி - அரச கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள்

36. பின்வரும் அட்டவணையானது A மற்றும் B ஆகிய இரு நாடுகள் ஓரலகு வளச்சேர்க்கையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய X மற்றும் Y ஆகிய இரு பொருள்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது.


| பொருள் | நாடு A | நாடு B |
|---|---|---|
| X | 200 | 600 |
| Y | 400 | 800 |

ஒவ்வொரு நாடும் தான் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ள பொருளின் உற்பத்தியில் சிறப்புத்தேர்ச்சி அடையுமாயின் வர்த்தகத்தின் மூலம் நன்மையடைய இரு நாடுகளுக்கும் பொருத்தமான பரிமாற்ற வீதமாக அமைவது.

1. 1X = 1Y
2. 1X = 1.3Y
3. 1X = 1.5Y
4. 1X = 2Y
5. 1X = 3Y

37. பின்வரும் வரைபடம் இறக்குமதி மீது தீர்வை விதித்ததன் பின்னுள்ள நிலைமைகளில் வெளிப்படுத்தப்படுகின்றது. இறக்குமதி மீது தீர்வை விதித்ததன் பின் இறக்குமதி மட்டம், மீளப்பெறமுடியாத நலனிழப்பு என்பவற்றை சரியாக வெளிப்படுத்துவது.

| | இறக்குமதி மட்டம் | மீளப்பெறமுடியாத நலனிழப்பு |
|---|---|---|
| 1. | $Q_4 - Q_1$ | B + D |
| 2. | $Q_3 - Q_2$ | B + C |
| 3. | $Q_3 - Q_2$ | B + D |
| 4. | $Q_4 - Q_3$ | B + D |
| 5. | $Q_3 - Q_1$ | B + A |




38. பின்வரும் அட்டவணை ஒரு நாட்டின் ஈராண்டுகாலப் பகுதியிலான பொருளாதாரச் செயற்பாட்டினைக் காட்டுகின்றது.

| ஆண்டு | ஏற்றுமதிகளின் அளவுச்சுட்டி | இறக்குமதிகளின் அளவுச்சுட்டி | நாணயமாற்று வீதம் |
|---|---|---|---|
| 1 | 100 | 100 | 180 |
| 2 | 80 | 110 | 180 |

பின்வருவனவற்றுள் எது மேற்போந்த விபரங்களுடன் இசைவானது?
1. ஏற்றுமதிகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.
2. இறக்குமதிகளின் விலை அதிகரித்துள்ளது.
3. வர்த்தகமாற்று விகிதத்தில் ஓர் மேம்பாடு ஏற்பட்டுள்ளது.
4. வர்த்தகநிலுவை மோசமடைந்து சென்றுள்ளது.
5. வர்த்தக மாற்று விகிதத்தில் ஓர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

39. ஜேர்மனியைச் சேர்ந்த முதலீட்டாளர் ஒருவர் இலங்கைக் கம்பனி ஒன்றின் பங்குகளைக் கொள்வனவு செய்வாராயின் இக்கொடுக்கல் வாங்கல் இலங்கையின் சென்மதி நிலுவையில் உள்ளடக்கப்படுவது.

1. நடைமுறைக்கணக்கின் ஒரு பெறுகையாகவாகும்.
2. நடைமுறைக்கணக்கின் ஒரு செலுத்தலாகவாகும்.
3. மூலதனக் கணக்கின் ஒரு பெறுகையாகவாகும்.
4. மூலதனக்கணக்கின் ஒரு செலுத்தலாகவாகும்.
5. நிதிக்கணக்கின் ஒரு பெறுகையாகவாகும்

40. வெளிநாட்டு நாணயச் சந்தையில் இலங்கை ரூபாவிற்கான நிரம்பல் ஏற்படுவது?

1. இலங்கையின் ஏற்றுமதிகள் + இலங்கைக்கான மூலதன உட்பாய்ச்சல் மூலமாகும்
2. இலங்கையின் ஏற்றுமதிகள் + இலங்கையிலிருந்தான மூலதன வெளிப்பாய்ச்சல்கள் மூலமாகும்
3. இலங்கையின் இறக்குமதிகள் + இலங்கையிலிருந்தான மூலதன வெளிப்பாய்ச்சல்கள் மூலமாகும்
4. இலங்கையின் இறக்குமதிகள் + இலங்கைக்கான மூலதன உட்பாய்ச்சல்கள் மூலமாகும்.
5. இலங்கையின் இறக்குமதிகள் + இலங்கையின் ஏற்றுமதிகள்

41. சர்வதேச நாணய நிதியத்திற்குரிய ஒதுக்குச் சொத்துக்களாகிய சிறப்பு எடுப்பனவு உரிமை (SDR)களின் பெறுமதியைத் தீர்மானிக்கின்ற பண வகைகளைக் கொண்ட சரியான விடை யாது?

1. அமெரிக்க டொலர், ஸ்டேலிங் பவுண், யூரோ, யென் மற்றும் சீன ரென்மின்பி (யுவான்).
2. அமெரிக்க டொலர், ஸ்டேலிங் பவுண், யூரோ, யென் மற்றும் இந்திய ரூபாய்.
3. அமெரிக்க டொலர், ஸ்டேலிங் பவுண், யென் மற்றும் சீன ரென்மின்பி (யுவான்).
4. அமெரிக்க டொலர், பிரான்சின் பிராங், யென் மற்றும் மற்றும் இந்திய ரூபாய்.
5. அமெரிக்க டொலர், ஸ்டேலிங் பவுண், யென், யூரோ மற்றும் குவைத் தினார்.

42. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நோக்கங்களில் ஒன்று

1. சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் தடைகளை அகற்றி அதனை ஊக்குவித்தல்
2. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நடைமுறைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பல்பக்க கொடுப்பனவு முறையை உருவாக்குதல்.
3. அங்கத்துவ நாடுகளுக்கு கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
4. வெளிநாட்டு தனியார் முதலீடுகளை ஊக்குவித்தல்.
5. திடீர் நிதி நெருக்கடிகளின் போது அங்கத்துவ நாடுகளுக்கு தற்காலிக கடன் வசதிகளை பெற்றுக் கொடுத்தல்.

43. குறிக்கப்பட்ட பொருளாதாரமொன்றின் தகவல்கள் கீழே உமக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 2019 நடைமுறை விலையில் மொத்த உள்நாட்டு .உற்பத்தி | 60,000 மில்.ரூபா |
| 2019 உள்ளார்ந்த உற்பத்திச் சுருக்கி | 125 |
| 2018 மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 45000 மி.ரூபா |

இப்பொருளாதாரத்தில் 2019ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி வீதம்?

1. 5.5% 2. 6.66% 3. 33.33% 4. 4.5% 5. 7.66%

44. 2019ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த உள்நாட்டு, தேசிய சேமிப்பு. முதலீடு என்பவற்றின் சதவீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில்?

| | மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதம் | தேசியசேமிப்பு வீதம் | முதலீட்டு வீதம் |
|---|---|---|---|
| 1. | 18.9 | 23.9 | 25.2 |
| 2. | 27.6 | 32.8 | 35.0 |
| 3. | 21.7 | 26.2 | 28.8 |
| 4. | 21.7 | 28.2 | 28.8 |
| 5. | 20.7 | 24.7 | 26.8 |

45. சமூகத்தின் மிகச் செல்வந்த 10% சதவீதமானோரிடமிருந்து சமூகத்தின் மிக வறிய 10% சதவீதமானோரை நோக்கிய ஒரு வருமான மீள்பங்கீட்டை மேற்கொண்டால்,
1. ஜினி குணகம் அதிகரிப்பதுடன் லோரன்ஸ் வளையி $45^0$ கோட்டிற்கு அருகில் செல்லும்.
2. ஜினி குணகம் குறைவடைவதுடன் லோரன்ஸ் வளையி $45^0$ கோட்டிற்கு அருகில் செல்லும்.
3. ஜினி குணகம் குறைவடைவதுடன் லோரன்ஸ் வளையி $45^0$ கோட்டிலிருந்து விலகிச் செல்லும்.
4. ஜினி குணகம் அதிகரிப்பதுடன் லோரன்ஸ் வளையி $45^0$ கோட்டிலிருந்து விலகிச் செல்லும்.
5. ஜினி குணகம் அதிகரிப்பதுடன் லோரன்ஸ் வளையி $45^0$ கோட்டின் மீது அமையும்.

46. உலக வங்கியின் வகைப்படுத்தலின்படி கீழ் நடுத்தர வருமான நாட்டிற்குரிய தலைக்குரிய வருமான மட்ட வீச்சு எவ்வளவாகக் காணப்பட வேண்டும்
1. 1025 க்கு கீழ் ஐக்கிய அமெரிக்க டொலர்
2. 1026 - 3995 ஐக்கிய அமெரிக்க டொலர்
3. 3996 - 4035 ஐக்கிய அமெரிக்க டொலர்
4. 4036 - 12375 ஐக்கிய அமெரிக்க டொலர்
5. 12376 க்கு மேல் ஐக்கிய அமெரிக்க டொலர்

47. இலங்கையில் மிகக்குறைந்த வருமானத்தினை பெறும் 20%த்தினர் மொத்த தேசிய வருமானத்தில் 4.8%ஐ பெற்றுக் கொள்கின்றனர். அதே போல் மிகவும் உயர்ந்த வருமானத்தினைப் பெறும் 20%த்தினர் 50.8% ஐ பெற்றுக் கொள்கின்றனர். இத்தரவுகளின் அடிப்படையில் ஐயனை பரவல் விகிதம் என்னவாகக் காணப்படும்?

1. 10.58 2. 0.094 3. 12.0 4. 6.58 5. 18.25

48. 2016 வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவின் கருத்தாய்வின் படி இலங்கையில் கூடிய தலைக்குரிய வறுமை விகிதத்தினைக் கொண்ட மூன்று மாகாணங்கள்
1. வடக்கு, கிழக்கு, ஊவா
2. கிழக்கு, வடக்கு, வடமத்திய
3. வடக்கு, கிழக்கு, சப்பிரகமுவ
4. வடக்கு, ஊவா, சப்பிரகமுவ
5. கிழக்கு, ஊவா, மத்திய

49. 1960-1977 காலப்பகுதியில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்திக் கொள்கையை எவ்வாறு அழைக்கலாம்?
1. வெளிநோக்கிய ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கை
2. உள்நோக்கிய இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கை
3. பின் தாராண்மைவாத பொருளாதாரக் கொள்கை
4. திறந்த பொருளாதாரக் கொள்கை
5. சந்தையை மையப்படுத்திய அபிவிருத்திக் கொள்கை

50. ஒரு நாட்டின் சனத்தொகைப்பரம்பல், தொழிற்படை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 0-14 வயதுக்கு இடைப்பட்டோர் | 08 மில்லியன் |
| 15-59 வயதுக்கு இடைப்பட்டோர் | 40 மில்லியன் |
| 60 வயதுக்கு மேற்பட்டோர் | 06 மில்லியன் |
| பொருளாதார ரீதியில் செயலற்ற சனத்தொகை | 15 மில்லியன் |
| தொழில்புரியும் சனத்தொகை | 23 மில்லியன் |

இப் பொருளாதாரத்தின் தொழிற்படையின் பங்குபற்றல் வீதமும், தொழிலின்மை வீதமும் முறையே?

1. 50% மற்றும் 20% ஆகும்
2. 62.5% மற்றும் 8% ஆகும்
3. 62.5% மற்றும் 5% ஆகும்
4. 67.5% மற்றும் 8% ஆகும்
5. 66.6% மற்றும் 6.2% ஆகும்.

*மாகாணக் கல்வித் திணைக்களம்*
*வடக்கு மாகாணம்*
*க.பொ.த (உயர்தரம்) முன்னோடிப் பரீட்சை- 2021*

**தரம் 13 (2021) பொருளியல் -T-11 மூன்று மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

**அறிவுறுத்தல் : உப பிரிவு "அ", "ஆ" ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

**உப பிரிவு - 'அ'**

01.

i. **"பொருளாதாரப் பண்டத்தின் பயனாளர்கள் விலை செலுத்துவதன் மூலமே அப்பண்டங்களை பெற்றுக்கொள்ள முடியும்"** இக்கூற்றின் நடைமுறைப் பொருத்தப்பாட்டினை உதாரணத்தின் மூலம் விளக்குக. (04 புள்ளிகள்)

ii. வளங்களின் விளைதிறன் என்றால் என்ன? ஒரு நாடு தன்னிடமுள்ள வளங்களின் விளைதிறனை அதிகரிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை? (04 புள்ளிகள்)

iii. சந்தைப் பொருளாதாரத்திலிருந்து கட்டளைப் பொருளாதாரம் எவ்வாறு வேறுபடுகின்றது? (04 புள்ளிகள்)

iv. ஆடை (x) , நெல் (y) எனும் இரண்டு வகையான பண்டங்களை உற்பத்தி செய்யும் பொருளாதாரமொன்று அதிகரித்து செல்லும் அமையச் செலவில் உற்பத்தியில் ஈடுபடுவதாகக் கருதவும். இதற்குரிய உற்பத்தி சாத்திய வளையியை வரைந்து பின்வரும் நிகழ்வுகளை உற்பத்தி சாத்திய வளையி மூலமாக வெளிப்படுத்துக,

அ. வேலையின்மை வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு.
ஆ. Covid-19 இன் பொருளாதாரத் தாக்கம்.
இ. வெள்ளப்பெருக்கு காரணமாக நெற்பயிர்கள் அழிவடைந்தமை.

(4 புள்ளிகள்)

v. **"ஒரு சமூகத்தின் எதிர்கால பொருளாதார வளர்ச்சி வீதமானது நிகழ்காலத்தில் கைவிடப்படும் நுகர்வில் தங்கியிருக்கும்"** இக்கூற்றினை பொருத்தமான வரைபடங்கள் மூலமாக விளக்குக. (4 புள்ளிகள்)

02.

i. கேள்வி விதி என்றால் என்ன? அவ்விதிக்கு அடிப்படையாகவுள்ள இரண்டு விடயங்களையும் குறிப்பிட்டு அவற்றை விளக்குக? (4 புள்ளிகள்)

ii. அ. **சாதாரண பண்டம்** என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ஆ. X என்ற பண்டத்தின் ஆகக் கூடிய கேள்வி விலை ரூபா20 ஆகக் காணப்பட்டது. அப்பண்டத்தின் விலை 4 ரூபாவால் வீழ்ச்சியடைந்த போது அதன் கேள்வித்தொகை 20 அலகுகளால் அதிகரிக்கும் எனக்கருதி கேள்விச் சார்பினை உருவாக்குக. (2 புள்ளிகள்)

iii. நெல்லின் நிரம்பல் அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைப் பட்டியலப்படுத்துக? (4 புள்ளிகள்)

iv. பருத்தி ஆடையின் விலை ரூபா 800 இலிருந்து ரூபா 1000 ஆக அதிகரித்த போது அதன் கேள்வித்தொகை 10 இலிருந்து 08 ஆக வீழ்ச்சியடைந்தது எனின் பருத்தி ஆடையை

கேள்வி நெகிழ்ச்சியற்ற பண்டம் எனும் முடிவுக்கு வரமுடியுமா? உமது விடையை விளக்குக. (4 புள்ளிகள்)

v. A என்ற பண்டத்தின் கேள்வி, நிரம்பல் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| விலை (P) ரூபா | கேள்வித்தொகை (Qd) (அலகுகள்) | நிரம்பல் தொகை (Qs) (அலகுகள்) |
|---|---|---|
| 100 | 20 | 60 |
| 50 | 40 | 30 |

அ) A பண்டத்திற்குரிய கேள்வி, நிரம்பல் சார்புகளை உருவாக்கி சமநிலை விலை தொகையை காண்க? (02 புள்ளிகள்)

ஆ) சமநிலை விலையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி, நுகர்வோர் மிகை ஆகியவற்றை கணிப்பிடுக? (02 புள்ளிகள்)

03.

i. பண்டமொன்றின் உற்பத்தியாளர் மீது சிறப்பு வரி விதிப்பதனால் உற்பத்தியாளன் மிகைக்கு யாது நிகழும் என்பதனை வரிப்படத்தின் மூலம் விளக்குக. (4 புள்ளிகள்)

ii. X பண்டத்தின் சந்தைக்கேள்விச்சார்பு $Qd = 600 - 5p$ எனவும், $Qs = -100 + 5p$ எனத் தரப்படும் போது X பண்டத்தின் மீது அலகுக்கு 8 ரூபா வரி விதித்ததன் பின்னரான

அ) சமநிலை விலை, தொகை

ஆ) நுகர்வோன் மிகை

இ) உற்பத்தியாளன் மிகை

என்பவற்றைக் காண்க? (4 புள்ளிகள்)

iii. உச்ச விற்பனை விலை என்றால் என்ன? அதன் விளைவுகளையும் சுருக்கமாக விளக்குக? (4 புள்ளிகள்)

iv. விவசாய விளைபொருட்களின் விலைசார் கேள்விநெகிழ்ச்சியும், விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியும் ஒன்றைவிட சிறியதாகக் காணப்படுவதற்குரிய காரணங்களை தனித்தனியாக விளக்குக. (4 புள்ளிகள்)

v. நெல்லுக்குரிய போட்டிச்சந்தையின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$Qd = 5000 - 5p$$
$$Qs = -1000 + 5p$$

(P = ரூபாவில் புசல் ஒன்றிற்கு, Q = தொகை புசல்களில்)

அரசாங்கம் ஒரு புசல் நெல்லுக்கு உத்தரவாத விலையாக ரூபா 800ஐ அறிவித்துள்ளது.

அ. உத்தரவாத விலையிலுள்ள நிரம்பல் முழுவதும் சந்தைக்கு வரும்போது நுகர்வோர் செலுத்த விரும்பும் விலை யாது? (2 புள்ளிகள்)

ஆ. இவ் ஆதரவு விலை உற்பத்தியாளர்கள், நுகர்வோருக்கு நன்மையாக வேண்டுமெனின் அரசு மேற்கொள்ள வேண்டிய செலவு எவ்வளவு? (2 புள்ளிகள்)

04.

i. குறுங்கால நிறுவனமொன்றின் மொத்த உற்பத்திக்கும் எல்லை உற்பத்திக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (4 புள்ளிகள்)

ii. பேரளவுச் சிக்கனம் என்றால் என்ன? நிறுவனமொன்றின் பேரளவுச் சிக்கனத்திற்கு உதவும் வெளிவாரிச் சிக்கனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. அ) நிறைபோட்டிச் சந்தை ஆ) தனியுரிமைப் போட்டிச் சந்தை ஆகியவற்றின் பிரதான பண்புகளை பட்டியல்படுத்துக? (4 புள்ளிகள்)

iv. நிறைபோட்டித் தொழிலிலுள்ள நிறுவனமொன்று நட்டத்தினை அனுபவிக்கின்றது. அந் நிறுவனத்தின் மொத்த நட்டத் தொகையானது மொத்த நிலையான செலவின் பெறுமதிக்கு சமமானதாகக் காணப்படுவதாகக் கருதவும். இந் நிறுவனம் தொடர்ந்தும் தொழிலில் நிலைத்திருக்க முடியுமா? உமது விடையை தெளிவுபடுத்துக.

(4 புள்ளிகள்)

v. பொருளியல் இலாபத்திலிருந்து உற்பத்தியாளர் மிகை எவ்வாறு வேறுபடுகின்றது.

(4 புள்ளிகள்)

05.

i. கூட்டிய பெறுமதி எனும் எண்ணக்கருவிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?

(4 புள்ளிகள்)

ii. மொத்தத் தேசிய வருமானம் (GNI) என்றால் என்ன?

(4 புள்ளிகள்)

iii. செலவீட்டு அணுகுமுறையில் மொத்த உள் நாட்டு உற்பத்தியை எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது என்பதனை கருதுகோள் எண் பெறுமானத்தினைப் பயன்படுத்தி வெளிப்படுத்துக.

(4 புள்ளிகள்)

iv. மொத்தக் கேள்வி(AD), மொத்த நிரம்பல் (AS) என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தி அவற்றை வரைபடத்தில் வெளிப்படுத்துக.

(4 புள்ளிகள்)

v. கருதுகோள் பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் தரவுகள் வருமாறு?

| | | |
|---|---|---|
| மொத்த தேசிய வருமானம் | (Y) | = 8000 பில்லியன் ரூபா |
| செலவிடத்தக்க தேசிய வருமானம் | ($Y_d$) | = 7400 பில்லியன் ரூபா |
| தனியார் நுகர்வு | (C) | = 7100 பில்லியன் ரூபா |
| அரச பாதீட்டுப் பற்றாக்குறை | ($B_D$) | = 200 பில்லியன் ரூபா |
| அரச நடப்பு மாற்றல்கள் | ($T_R$) | = 50 பில்லியன் ரூபா |
| வர்த்தக மீதி | (TB) | = -300 பில்லியன் ரூபா |

இப் பொருளாதாரத்தின்

அ) அரசின் வரி வருமானம் (T)

ஆ) தனியார் முதலீடு (I)

எவ்வளவாகக் காணப்படும்?

(04 புள்ளிகள்)

## உப பிரிவு "ஆ"

**(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களை தெரிவு செய்க)**

06.

i. வட்டி வீதத்தில் ஏற்படுகின்ற வீழ்ச்சியானது எவ்வாறு கேள்வித்தூண்டல் பணவீக்கத்திற்கு வழிவகுக்கும் என்பதனை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக.

(4 புள்ளிகள்)

ii. ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_2b$) என்றால் என்ன? அதனைத் தீர்மானிக்கும் காரணிகளையும் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii. இடைத்தரகு நிதி நிறுவனம் என்றால் என்ன? அந் நிறுவனத்தின் பிரதான தொழிற்பாடுகள் யாவை?

(4 புள்ளிகள்)

iv. இலங்கை மத்திய வங்கி கையாளுகின்ற கொள்கை வட்டி வீதங்களை குறிப்பிட்டு அவ்வீதங்களை மத்திய வங்கி தற்போது குறைத்தமைக்குரிய நோக்கங்களையும் தெளிவுபடுத்துக?

(4 புள்ளிகள்)

v. வங்கி முறைமையொன்றின் கருதுகோள்ரீதியான ஐந்தொகையொன்று கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது.

| **பொறுப்புக்கள் (ரூபா மில்லியனில்)** | | **சொத்துக்கள் (ரூபா மில்லியனில்)** | |
|---|---|---|---|
| கேள்வி வைப்புக்கள் | 15000 | ஒதுக்குகள் | 2000 |
| | | கடன்கள் | 13000 |
| | 15000 | | 15000 |

இவ்வங்கி முறைமையின் சட்டப்படியான ஒதுக்குவீதம் 10% ஆகும் எனக் கொள்க. இப் பொருளாதாரத்தில் பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தின் அளவு 18000 மில். ரூபாவாகும்.

a) பணநிரம்பல் எவ்வளவு?

b) கடனாக்கச் செயற்பாடு பூர்த்தியடையும்போது இப் பொருளாதாரத்தின் பணநிரம்பலின் அதி உச்ச அளவைக் கணிப்பிடுக?

(4 புள்ளிகள்)

07.

i. "சந்தைத் தோல்வி" என்றால் என்ன? அதற்குரிய நான்கு காரணிகளை குறிப்பிடுக?

(4 புள்ளிகள்)

ii. உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு காணப்படும் போது சமூக உத்தம மட்ட வெளியீட்டினை விட சந்தை வெளியீடு ஏன் அதிகமாகக் காணப்படும் என்பதனை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக. (4 புள்ளிகள்)

iii. வரியின் மிகைச்சுமை (Excess Burden of taxation) என்பதனால் கருதப்படுவதென்ன? வரியின் மிகைச்சுமை பூச்சியமாகக் காணப்படும் சந்தர்ப்பம் ஒன்றினையும் பொருத்தமான வரைபடத்தின் மூலம் வெளிப்படுத்துக.

(04 புள்ளிகள்)

iv. இலங்கை அரசின் நடைமுறைச் செலவின் பொருளாதார வகைப்படுத்தலை வெளிப்படுத்துவதோடு 2020ம் ஆண்டின் அச்செலவுக்கட்டமைப்பினையும் வெளிப்படுத்துக.

v. இலங்கை அரசின் தற்போதய நிதி நிலைமைகளில் காணப்படும் பலவீனங்களை வெளிப்படுத்துக.

(4 புள்ளிகள்)

08.

i. பின்வரும் அட்டவணை X, Y எனும் பண்டங்களை உற்பத்தி செய்யும் நாடு A, நாடு B ஆகியவற்றின் ஓரலகு உள்ளீட்டுக்குரிய வெளியீட்டு மட்டத்தை புலப்படுத்துகின்றது?

| பண்டம் / நாடுகள் | வெளியீட்டு மட்டம் (அலகுகளில்) | |
|---|---|---|
| | X பண்டம் | Y பண்டம் |
| நாடு A | 100 | 50 |
| நாடு B | 90 | 30 |

அ) ஒவ்வொரு நாட்டிலும் தலா 100 உள்ளீடுகளைக் கொண்டிருப்பதாகக் கருதி ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனியாக நேர்கோட்டு உற்பத்தி சாத்திய வளையியை வரைக?

(02 புள்ளிகள்)

ஆ) ஒவ்வொரு நாடும் எப்பண்ட உற்பத்தியில் சிறக்குமியல்பு பெற வேண்டும்?

(02 புள்ளிகள்)

ii. “வர்த்தக பாதுகாப்பு வாதம்” என்பதனை வரைவிலக்கணப்படுத்தி இங்கு கையாளப்படும் தீர்வையல்லாத பாதுகாப்புமுறைகள் நான்கினைப் பெயரிடுக?

(04 புள்ளிகள்)

iii. கடந்த நான்கு தசாப்தத்தில் இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் குறிப்பிடுக?

(04 புள்ளிகள்)

iv. பின்வரும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களை இலங்கையின் சென்மதிநிலுவைக் கணக்கில் எங்கு பதிவு செய்வீர்?

(04 புள்ளிகள்)

அ) ஜப்பானிடமிருந்து 10000 மில்லியன் டொலர் பெறுமதியான மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்தல்

ஆ) தென்கொரியா முதலீட்டாளர்களுக்கு செலுத்திய 100 மில்லியன் டொலர் இலாபங்களும் பங்குலாபங்களும்

இ) இலங்கை அரசுக்கு ஐக்கிய அமெரிக்க குடியரசு 200 மில்லியன் டொலரை நன்கொடையாக வழங்கியமை

ஈ) இலங்கையிலுள்ள வங்கியொன்று பிரித்தானிய நாட்டு வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்ட 100 மில்லியன் டொலர் கடன்கள்.

(04 புள்ளிகள்)

v. ஐக்கிய அமெரிக்க டொலர் சந்தையில் அதன் கேள்வி, நிரம்பல் என்பவற்றை வரையறுத்து இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு எதிராக தேய்வடைவதன் பொருளாதார விளைவுகள் நான்கினைக் குறிப்பிடுக?

(04 புள்ளிகள்)

09.

i. பொருளாதார வளர்ச்சி என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதனை மொத்த நிரம்பல் வளையி மூலம் வெளிப்படுத்துக?

(05 புள்ளிகள்)

ii. மானிட அபிவிருத்தி என்றால் என்ன? மற்றைய தென்னாசிய நாடுகளுடன் (இந்தியா, பாகிஸ்தான்) ஒப்பிடும் போது இலங்கையின் மானிட அபிவிருத்தி சுட்டியின் பெறுமதி உயர்வாக இருப்பதற்குரிய காரணங்களை தெளிவுபடுத்துக?

(05 புள்ளிகள்)

iii. கடந்த இரண்டு தசாப்தத்தில் இலங்கையின் வறுமையில் ஏற்பட்ட மாற்றப்போக்கினை தனக்குரிய வறுமைச்சுட்டெண் மூலம் வெளிப்படுத்தி தற்போதைய அரசாங்கம் வறுமையை தணிப்பதற்கு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளும் தருக?

(05 புள்ளிகள்)

iv. இலங்கையின் சனத்தொகை வயதமைப்பில் சிறுவர்களின் சதவீதம் வீழ்ச்சியடைகின்றது. அதேநேரம் முதியவர்களின் சதவீதம் அதிகரித்து செல்லுகின்றது. இம்மாற்றப் போக்கின் விளைவுகளை தனித்தனியே விளக்குக?

(05 புள்ளிகள்)

10. i. "கடந்த ஐந்து ஆண்டுகளில் (2015 - 2019) இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதமானது 5 சதவீதத்திற்கு கீழே காணப்பட்டது" இதற்குரிய காரணங்களை வெளிப்படுத்துக.

(05 புள்ளிகள்)

ii. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 2016 - 2030 க்கு இடையில் உலக நாடுகள் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைந்து கொள்ளவேண்டும் என 2015ம் ஆண்டு இறுதியில் அறிவித்திருந்தது. அதிலுள்ள 17 குறிக்கோள்களில் முதல் ஐந்து குறிக்கோள்களையும் பெயரிடுக.

(05 புள்ளிகள்)

iii. இலங்கையின் வேலையின்மையின் தனித்துவமான பண்புகளை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

iv. தற்போதய அரசாங்கம் கிராமிய வறுமையை குறைக்கும் நோக்கில் 2020ம் ஆண்டு ஆரம்பித்துள்ள சப்ரிகம ( நிறைவானகிராமம்) திட்டத்திலுள்ள ஐந்து பிரதான வேலைத்திட்டங்களைப் பெயரிடுக.

(05 புள்ளிகள்)